கட்டுரை 02 · ARTICLE 02 | தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அற இலக்கியமும்

# பண்டைத் தமிழரின் தகவல் தொடர்பு முறைகள்

*Methods of Communication among the Ancient Tamils*

**முனைவர் ஆ. ஆனந்தி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர் – 626 001

***Dr. A. Ananthi**, Assistant Professor, Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar – 626 001*

**மின்னஞ்சல்:** ananthi@vvvcollege.org

**பக்கங்கள்:** 8–15

## ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்வியல், பண்பாடு, நம்பிக்கைகள் மற்றும் தகவல் தொடர்பு முறைகளை அறிந்துகொள்வதற்கான சிறந்த தகவல் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. பண்டைத் தமிழர் தங்களுக்குள் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள மனிதர்களைத் தவிரப் பல்வேறு ஊடகங்களையும் பயன்படுத்தியுள்ளனர் என்பதைச் சங்கப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அவற்றுள் முரசு, பறை, தண்ணுமை, முழவு போன்ற இசைக்கருவிகள் போர் தொடங்குதல், வெற்றி அறிவித்தல், திருமணம் மற்றும் இறப்பு போன்ற நிகழ்வுகளை உணர்த்தும் தகவல் தொடர்புச் சாதனங்களாக விளங்கியுள்ளன. மேலும், கொடியேற்றுதல், மடலேறுதல், விரிச்சி கேட்டல் போன்ற செயல்முறைகளும் குறிப்பிட்ட செய்திகளைப் பிறருக்கு உணர்த்தும் ஊடகங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. காலநிலை மாற்றங்கள், பூக்களின் மலர்ச்சி, பறவைகளின் செயல்பாடுகள், பல்லியின் ஒலி, உன்ன மரத்தின் இயல்பு போன்ற இயற்கைக் கூறுகளும் எதிர்கால நிகழ்வுகளை உணர்த்தும் குறியீடுகளாகவும் நம்பிக்கை சார்ந்த தகவல் ஊடகங்களாகவும் கருதப்பட்டுள்ளன. இக்கட்டுரை சங்க இலக்கியங்களில் இடம்பெறும் மேற்கண்ட தகவல் பரிமாற்ற முறைகளை இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து, பண்டைத் தமிழரின் சமூக வாழ்விலும் பண்பாட்டிலும் அவை பெற்றிருந்த இடத்தையும் அவற்றின் தகவல் தொடர்பியல் தன்மைகளையும் வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம், பண்டைத் தமிழரின் தகவல் பரிமாற்றம் நேரடி மொழிவழித் தொடர்பைத் தாண்டி, இசை, குறியீடு, சடங்கு, இயற்கை ஆகியவற்றின் வழியாகவும் நிகழ்ந்தமை புலப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம்; பண்டைத் தமிழர்; தகவல் தொடர்பு; தகவல் பரிமாற்ற ஊடகங்கள்; இசைக்கருவிகள்; இயற்கைக் குறியீடுகள்; விரிச்சி கேட்டல்; மடலேறுதல்; தமிழர் பண்பாடு

## Abstract

Sangam literature serves as a rich repository of information that helps us understand the lifestyle of the ancient Tamils. The ancient Tamil people established systematic ways of life based on the different geographical landscapes and organized their lives according to the three categories of Muthalporul (primary elements), Karupporul (thematic or associated elements), and Uripporul (human emotions and activities). Within this society, people exchanged information through various means.

When human beings, who directly convey information, are excluded from consideration, Sangam poems reveal that musical instruments, natural phenomena, and non-human living beings were recognized and used as mediums of communication. The objective of this article is to explore and analyse these mediums of communication as represented in Sangam literature.

**Keywords:** Sangam literature; ancient Tamils; Muthalporul; Uripporul; Karupporul; Types of Communication; Musical Instruments

## முன்னுரை

பண்டைத் தமிழரின் வாழ்வியலை அறிந்து கொள்ள உதவும் தகவல் களஞ்சியமாகச் சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன. நிலத்தின் அடிப்படையில் முறையான வாழ்வு நெறிகளை உண்டாக்கி அதற்கேற்ப முதல், கரு, உரிப்பொருட்களைப் பகுத்து வாழ்ந்த மக்கள் சமுதாயத்தில் தங்களுக்குள் தகவலைப் பலவகையில் பரிமாறி உள்ளனர். நேரடித் தகவல் சொல்லிகளான மனிதர்களை விடுத்து ஆய்ந்தால், இசைக்கருவிகள், இயற்கை நிகழ்வுகள், அஃறிணை உயிர்கள் போன்றவை தகவல் உணர்த்தும் ஊடகங்களாக உணரப்பட்டதையும் பயன்படுத்தப்பட்டதையும் சங்க பாடல்கள் வழி அறிய முடிகிறது. அவற்றை ஆராந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இசைக்கருவிகள்

பழந்தமிழர் வாழ்வில் இசைக்கருவிகள் தகவல் தொடர்பு சாதனங்களாக பயன்படுத்தப்பட்டதைச் சங்கப்பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. முரசு, பறை, தண்ணுமை, முழவு போன்ற இசைக்கருவிகள் பல தகவல்களை பரிமாறும் ஊடகங்கள் இருந்துள்ளன.

### முரசு

தமிழரின் புற வாழ்வில் முரசின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும் போரின் தொடக்கம் முதல் இறுதி வரை முரசு முழங்குகிறது. போர் துவங்க போகிறது என்பதை அறிவிக்க அந்நாளில் முரசு முழங்கப்பட்டது. அது போர் முரசு ஆகும் வீரப்படையினர் முழக்கும் போர் முரசின் பேரொலியைக் கேட்டு வீரர்கள் போருக்கு உற்சாகமாகத் தயாராவதை,

> “இரங்கு முரசின், இனம் சால் யானை
> ………………………………..
> மறப்படை நுவலும் அரிக்குரற் தண்ணுமை”
>
> (புறநானூறு.270 : -9 )

இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன. போர் நிகழ்வுகளில் முரசு மட்டுமன்றி பறையும் ஒலிக்கப்பட்டுள்ளது. பாண்டிய மன்னன் ஒருவன் போருக்கு ஆயத்தமான போது, அச் செய்தியை கிணைப்பறை அறைந்து தெரிவித்துள்ளான்.

> "தெண் கண் மாக் கிணை இயக்கி, 'என்றும்
> ஆமாறு கொண்டோர் மதில் இடறி.."
>
> (புறநானூற்று.387)

செல்வக் கடுங்கோ வாழியாதன் கிணைப் பறை முழங்க போர்க்களத்தில் போரிட்டதை இவ்வடிகள் தெரிவிக்கின்றன.

வீரர் பலருள் சிறந்த வீரனைத் தேர்வு செய்த மன்னன் அவனுக்குப் பொன்னைக் கொடுப்பதோடு போருக்குரிய அடையாளப் பூவையும் கொடுக்க இருப்பதை, இசைக்கலைஞன் ஒருவன் ஊரில் தண்ணுமை (தமுக்கு) அடித்துத் தெரிவித்ததை,

கேட்டியோவாழிபாண!பாசறைப்,
‘பூக்கோள்இன்று’என்றுஅறையும்
மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே?

(புறப்பாடல்.289)

எனும் பாடல் உணர்த்துகின்றது. இங்கு தகவல் தெரிவிக்கும் இசைக் கருவியாகத் தண்ணுமை (தமுக்கு) பயன்படுத்தப்பட்டுள்ளது. போருக்குக் கிளம்பும்போது மட்டுமல்ல போருக்குச் செல்லும் போதும் முரசறைந்து கொண்டே படை வீரர்கள் சென்ற மையை,

"முரசு எழுந்து இரங்கும் தானையொடு தலைச்சென்று
அரைசு பட கடக்கும் உரைசால் தோன்றல்

(புறநானூறு 211:5-6)

என்பதனால் உணரலாம். தாங்கள் போர் புரிய செல்வதைத் தெரிவிக்கும் குறிப்பே இம் முரசு அறைதல்.

தலைவன் ஒருவன் தன் தேர்ப் பாகனிடம் பகை அரசர்கள் கொடுத்த திறையை, வெற்றி முரசை இழும் எனும் இடைவிடாத ஓசையுடன் முழக்கிப் பெற்றுக் கொண்டதை

“ஓடா நல்லேற்று உரிவை தைஇய
ஆடு கொள்முரசும் இழுமென முழங்க
நாடு திறை கொண்டனம் ஆயின் பாக"

(அகநானூறு.334:1-3)

எனக் கூறுவதால் அறிய முடிகிறது.

### பறை

பறையானது புறவாழ்வில் மட்டுமல்லது அக வாழ்விலும் இசைக்கவும் அதே வேளையில் குறிப்பிட்ட செய்தியை பிறருக்கு தெரிவிக்கவும் பயன்பட்டுள்ளது.

"பறைபட பணிலம் ஆர்ப்ப"

(குறுந்தொகை.15)

இவ்வடிகள் திருமணத்தின்போது முரசு முழங்கப்பட்டதையும் சங்கு ஒலிக்கப்பட்டதையும் கூறுகிறது. மற்றும் ஒரு பாடல்,

“ஓர் இல் நெய்தல் கறங்க ஓர் இல்
ஈர்ந் தண் முழவின் பாணி ததும்ப”

(புறநானூறு 194:1-4)

என இறந்தவர் வீட்டில் பறை ஒலித்ததையும் திருமண வீட்டில் முழவு இசைக்கப்பட்டதையும் கூறுகிறது. இக்கருவிகள் இங்கு தகவல் கடத்திகளாக உள்ளன. பறை ஒலியைக் கேட்கும் அக்கம் பக்கத்தினர் அங்கு இறப்பு நேர்ந்துள்ளதையும் முழவோசையைக் கேட்போர் அங்கு மண நிகழ்வு நடக்க உள்ளதையும் அறிந்து கொள்வர்.

## கொடி

போர்ப் பாசறை ஒன்றில் வெற்றி பெற்ற வேந்தன் களத்தில் தனது அடையாளக் கொடியை உயர்த்தி தான் பெற்ற வெற்றியை ஊருக்கு உணர்த்தியதை,

“மத வலி யானை மறலிய பாசறை
இடி உமிழ்முரசம் பொருகளத்து இயம்ப
வென்று கொடி எடுத்தனன் வேந்தனும்”

(அகநானூறு 354:1-3)

என்ற பாடல் அடிகளால் அறியலாம். இங்கு கொடியை உயர்த்திக் காட்டுவது போரில் யார் வெற்றி பெற்றார் என்ற தகவலை பிறர் அறியச் செய்யும் முறைகளில் ஒன்றாகும். இன்றும் நாடுகளுக்கு இடையேயான போட்டிகளின் முடிவில் வெற்றி பெற்ற நாட்டின் கொடியை உயரத்தில் பறக்க வைக்கும் முறை வழக்கில் உள்ளதைக் காணலாம்.

## விரிச்சி கேட்டல்

சங்க கால மக்கள் தாங்கள் ஏதாவது ஒன்றை மனதில் எண்ணி தவிக்கும் போதோ அதற்காகத் தெய்வத்தை வழிபடும் போதோ அந்தப் பக்கமாக செல்வோர் கூறும் சொல் தமக்கு நேர்மறையாக இருந்தால் தான் நினைப்பது நிறைவேறும் என்றும் எதிர்மறையாக இருந்தால் தமது விருப்பமும் வேண்டுதலும் நிறைவேறாது என்றும் நம்பிக்கை வைத்திருந்தனர். இதனை விரிச்சி கேட்டல் என்பர். போருக்குச் செல்லும் வீரர்கள் அல்லது தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியர் எதிர்காலத்தில் நிகழப் போவதை அறிந்து கொள்ள இம்முறையைப் பின்பற்றியுள்ளனர்.

முதுமையான பெண்கள் தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்டு நிற்றலை,

"பெரு முது பெண்டிர் விரிச்சி நிற்ப"

(முல்லைப்பாட்டு,7-11)

என்பதால் அறியலாம். முல்லை நில மக்களிடம் விரிச்சி கேட்கும் வழக்கம் அதிகம் இருந்தமையை முல்லைத்திணைப் பாடல்கள் உணர்த்துகின்றன பிற திணை மக்களிடமும் இவ்வழக்கம் இருந்துள்ளது. நற்றிணையும்,

"திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப"

(நற்றிணை 40)

எனக் கூறுகிறது.

பெருமுது பெண்டிர்  பிரிந்து சென்ற தலைவனின் நிலையினை அறிதற்கு, மூதூர் மருங்கு சென்று, நற்சொல் கேட்ட போது,  இடைக்குல மடந்தை  இளங்கன்று ஒன்று பால் குடிக்காத துயரால் பசுவை நோக்கிக் கதறும் தன்மை கண்டு, கோவலர் ஆனிரையை ஓட்டிவர நன்கு மேய்ந்து நின் தாயார் இப்பொழுது வருகுவார் என்று கூறினாள்.

"---------------------ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள்; கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுநர் தாயர் என்போள்
நன்னர் நனமொழி கேட்டனம்

(முல்லைப்பாட்டு: 13-17)

இது பிரிந்த தலைவன் விரைந்து வருவான் என்னும் தகவலை குறிப்பாக உணர்த்தியமையால்,  நன்மொழியாகக் கருதப்பட்டது.

புறப்பாடல் ஒன்று போருக்குச் சென்று திரும்பி வந்துள்ள தலைவனின் உடல்நிலை  குறித்து அறிய விரிச்சி கேட்டதையும் அத்தகவல் கொண்டு கேட்போர் ஒரு முடிவுக்கு வருவதையும் உணர்த்துகிறது. போரினால் கணவனுக்கு உண்டான

விழுப்புண்கள் ஆறாத நிலையில், மனைவிக்குத் தீய நிமித்தங்கள் தோன்றுகின்றன. முது பெண்கள் நெல்லும் நீரும் தெளித்து விரிச்சி கேட்கக் காத்திருந்தபோது, நல்ல விருச்சிச் சொற்களும் வரவில்லை. எனவே தலைவன் பிழைக்க மாட்டான்; இறந்து படுவான்; அவனின்றி வாழ்வதென்பது எனக்கு அரிது; நான் வாழேன்; என்கிறாள்.

"நெல் நீர் எரிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா"

(புறநானூறு :280)

இவ்வாறு எதிர்மறையான விரிச்சி வந்தமையால் அவன் பிழைக்க மாட்டான் நானும் அவனோடு இறந்து விடுவேன் என்ற தகவலைத் தலைவி ஊராருக்கு உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## மடலேறுதல்

மடலேறுதல் என்பது சங்ககால வழக்கங்களில் ஒன்று. இதனை மடல் ஊர்தல் என்றும் கூறுவர். தன் காதலியை அடைய முடியாத தலைவன் அவளை அடையும் கடைசி முயற்சியாக மடலூர்தல் வழக்கம். தலைவிக்கும் ஊரார்க்கும் தன் காதலை உணர்த்தும் பொருட்டு பனை மடல்களால் செய்யப்பட்ட குதிரை அல்லது யானை ஒன்றில் ஊர்ந்து தலைவியின் பெயரைப் பாடிக் கொண்டே செல்வது மடலூர்தல். பெண்கள் மடலேறும் மரபு வழக்கில் இல்லை.

குறுந்தொகைப் பாடலொன்றில் மடலேறும் முறை,

"மாவென மடலும் ஊர்ப; பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே"

(குறுந்தொகை.பா.எ.17)

என்று கூறப்பட்டுள்ளது.

தலைவன் தனது கையில் தலைவியின் ஓவியம் வரைந்த கொடியை ஏந்தி இவள் தான் தனது துயரத்திற்கு காரணம் என ஊரார்க்கு தெரிவிப்பது,

"பொன்னேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பன்னூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க ஏறி நாணட்(டு)
அழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப
இன்னாள் செய்த(து) இதுவென முன்னின்(று)
அவள்பழி நுவலும் இவ்வூர்"

(குறுந்தொகை.பா.எ.173)

என்றவாறு கூறப்படடுள்ளது.

தலைவன் படும் துயரங்களைக் காணும் சான்றோர் பெருமக்கள் தலைவனுக்குத் தலைவியை மணம் முடித்து வைக்கும் முயற்சிகளை

மேற்கொள்வர். சில நேரங்களில் தலைவியும் தலைவனின் காதலை உணர மடல் ஏறுதல் காரணமாய் அமைவதுண்டு. இதனை,

"மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை, ஆவிரை, எருக்கொடு
பிணித்தியாத்து
மல்லல்ஊர் மறுகின்கண் இவட்பாடும்,
இஃதொத்தன்
எல்லீரும் கேட்டீமின் என்று.............
என்று யான் பாடக் கேட்டு,
அன்புறு கிளவியாள் அருளி வந்து அளித்தலின்
துன்பத்தில் துணையாய மடல் இனி இவள் பெற
இன்பத்துள் இடம்படல் என்று இரங்கினள் அன்புற்று,

(கலி.பா.எ.138)

தலைவன் தனக்காக மடலேறி துன்புற்றதைக் கண்ட தலைவி அவன் மீது இரக்கம் கொண்டு அவன் காதலை ஏற்றுக் கொண்ட செய்தியினை இக்கலித்தொகைப் பாடல் நமக்கு உணர்த்துகின்றது. இங்கு மடல் ஏறுதல் வாயிலாக ஊரார்க்கும் தன்னுடைய காதலிக்கும் தன் காதலை தெரிவிக்கின்றான் இந்த மடலேறல் நிகழ்வு இங்கு தகவலைத் தெரிவிக்கின்ற ஊடகமாகப் பயன்பட்டுள்ளது.

## இயற்கை நிகழ்வுகள்

இயற்கையாக நிகழும் நிகழ்வுகளும் மக்களின் மன எண்ணங்களுக்கு ஏற்ப ஏதோ ஒரு தகவலை உணர்த்துவனாக நம்பப்படுகிறது. பண்டைத் தமிழரிடம் இது போன்ற நம்பிக்கைகள் பல நிலைகளில் இருந்ததைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

### காலம்

இயற்கை மாற்றங்களை உணர்ந்து பருவங்களின் வரவை அறிந்து கொண்ட மக்கள், குறிப்பிட்ட பருவத்தில் நிகழும் செயல்கள் வழி நடக்க இருப்பதனை முடிவு செய்துள்ளனர். கார்காலத்தில் வந்து விடுவேன் என்று கூறிச் சென்ற தலைவன், பருவம் வந்தும் வரவில்லை என வருந்தும் தலைவியிடம் கார்காலம் இன்னும் வரவில்லை என்கிறாள் தோழி. அதற்குத் தலைவி, முல்லை நிலத்திலுள்ள கொன்றை மரங்களில் மழைத்துளிகள் வீழ, அம்மரங்களில் அரும்புகள் தோன்றின. பின்னர் மலர்கள் பூத்தன. பின்னர் அவை பெண்களின் கூந்தல் போன்று காய்களைத் தந்தன. இறுதியில், அவை துளை உடைய குழலாக மாறியதைச் சென்று காண்பாயாக! இவற்றைக் கண்டும் கார்ப்பருவம் இன்னமும் வரவில்லை என்று வற்புறுத்தாதே!' என்று தோழியை நோக்கிக் கூறியதை,

“வீயும் வியப்புறவின் வீழ்துளியால் மாக்கருக்கை
நீயும் பிறரொடும் காண் நீடாதே – ஆயும்
கழலாகிப் பொன்வட்டாய்த் தாராய் மடலாய்க்
குழலாகிக் கோல் சுரியாய்க் கூர்ந்து”

(திணைமாலை நூற்றைம்பது, 98)

என்ற பாடல் அடிகளின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

இங்கு கொன்றை மரங்கள் பூத்து கார் காலம் வந்துவிட்ட தகவலை உணர்த்துவதாய் உள்ளது. மேலும் காலத்தை அறிவிக்கும் அடையாளப் பூக்களும் ஒன்றாகப் பகன்றையும் இருந்துள்ளதை,

"உள்ளார் கொல்லோ தோழி வெள்ளிதழ்ப்
பகல்மதி உருவைல் பகன்றை மாமலர்
வெண்கொடி ஈங்கை பைம்புதல் அணியும்
அரும்பனி அளை இய கூதிர்
ஒருங்கிவண் உறைதல் தெளிந்தகன் றோரே

(ஐங்குறுநூறு:பா.எ.456)

என்ற பாடல் உணர்த்துகிறது.

## பூக்கள்

மக்களின் அகவாழ்விலும் புற வாழ்விலும் பருவத்திற்கு ஏற்ப இயற்கை மாறுதலுக்கு ஏற்ப மலரும் பூக்கள் நம்பிக்கை சார்ந்த தகவல் பரிமாற்ற நிகழ்வாகக் கருதப்பட்டுள்ளன. முல்லைத் திணைப் பாடல்களில் கார் காலமும் முல்லைப் பூ மலர்தல் குறித்தும் அதிகம் காணப்படுகிறது. முல்லை மலர்ந்து விட்டால் பிரிந்து சென்ற தலைவன் வந்து விடுவேன் எனக் குறிப்பிட்ட காலம் வந்து விட்டதை அறிந்து கொள்வாள் தலைவி. தோழி ஒருத்தி தலைவியிடம் கார்காலத்தில் தோன்றிய கரிய கார்மேகமானது முல்லை அரும்புகளைத் தோற்றுவித்துள்ளது. ஆதலால் 'நம் தலைவர் இக்கார்ப் பருவத்தில் வருவார். உமது மென்மையான மார்பில் தோன்றிய பசலை நிறம் இனி மாறும்' என்று ஆற்றுப்படுத்துகிறாள். இதனை,

"மென்முலை மேல் ஊர்ந்த பசலை மற்று
என்னாம்கொல்
நன்னுதல் மாதராய் ஈதோ நமர் வருவர்
பன்னிற முல்லை அரும்பப் பருவம் செய்து
இன்னிறம் கொண்டதுஇக் கார்"

(திணைமொழி ஐம்பது, 22)

என்ற பாடல் அடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

இங்கு முல்லை மலர்தல் என்பது தலைவனின் வரவை உணர்த்துவதாக உள்ளது. இவ்வாறு குறிப்பிட்ட காலங்களில் மலரும் பூக்கள் தகவல் கடத்தும் சாதனங்களாகக் கருதப்பட்டுள்ளன.

தலைவியிடம் தோழி ஒருத்தி, வெண்காந்தள் பூங்கொத்துக்களை ஈன்ற காடுகள், பொருளை ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன் விரைந்து வருதலைத் தெரிவிப்பதாகக் கூறும்,

"புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்
வணர்ஒலி ஐம்பாலாய் வல்வருதல் கூறும்
அணர்த்தெழு பாம்பின் தலைபோல்புணர் கோடல்
பூங்குலை ஈன்ற புறவு"

(கார் நாற்பது, 11)

என்ற பாடலில் வெண்காந்தள் பூத்திருப்பது தலைவனின் வரவை உணர்த்தும் ஊடகமாக அமைந்துள்ளது.

## பறவைகள்

முரசுக் கடவுளுக்கு பலிகொடுத்து அவற்றை காக்கையும் பருந்தும் உண்டால் பெரும் வெற்றி கிட்டும் என நம்பப்பட்டது,

"நெய்த்தோர் தூஉயநிறை மகிழ் இரும்பலி
எறும்பும் மூலசா இறும்பூது மரபின்
கருங்கண் காக்கையொடு பருந்து இருந்துஆர
ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழல்கால்”

(பதிற்.30:36-40)

எனும் பாடலடிகளால் அறிய முடிகிறது.

## பல்லி

தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி தலைவன் வரும் நாளை ஆவலோடு எதிர்பார்த்து நல்ல பலனை எதிர்நோக்கும்போது பல்லியும் ஓசை எழுப்பி அதற்கு இணக்கமான நல்ல தகவலை அறிவித்ததாம். இதனை,

“முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல்
வருவம் என்னும் பருவரல் தீரப்
படும்கொல் வாழி நெடுஞ்சுவர்ப் பல்லி”

(நற்.169:1-3)

என்ற பாடல் வழி உணரலாம்.

## உன்ன மரம்

உன்னம் என்பது ஒருவகை மரம் ஆகும். இம்மரம் தழைத்து வளர்ந்திருக்குமாயின் தாங்கள் தொடங்க இருக்கின்ற செயல் வெற்றி பெறும் எனவும் வாடி இருக்குமாயின் தீய செயலில் முடியக்கூடும் எனவும் குறிப்பு உணர்த்துவதாக நம்பப்பட்டது.

“பொன்னி னன்ன பூவிற் சிறியிலைப்
புன்கால் உன்னத்துப் பகைவன் எம்கோ”

(பதிற்.61:5-6)

என்ற பாடலில் உன்ன மரத்தின் இயற்கைத் தன்மை எதிர்காலத்தில் நிகழ உள்ளதைத் தெரிவிக்கும் ஊடகமாகக் கருதப்பட்டதைத் தெளிவுறுத்துகிறது.

## தொகுப்புரை

பண்டைத் தமிழரின் தகவல் தொடர்பு என்பது நேரடி முறையிலும் குறிப்பு நிலையிலும் நிகழ்ந்துள்ளது. மக்களிடையே புழக்கத்தில் இருந்த இசைக்கருவிகள் இசைக்கு மட்டுமல்லாது தகவலைத் தெரிவிக்கும் சாதனமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இயற்கைக் கூறுகளான காலம், பூக்கள், மரங்கள் போன்றவையும் நிகழப் போவதைக் குறிப்பாக உணர்த்தும் நம்பிக்கை சார்ந்த ஊடகங்களாகக் கருதப்பட்டுள்ளன. மடலேறல் எனும் அகம் சார்ந்த நிகழ்வும் விரிச்சி கேட்டலும் தகவல் தெரிவிக்கும் சடங்கு முறையாக அறிய வருகின்றன. இவ்வாறு மனிதர்களைத் தாண்டி பல நிலைகளில் சங்கத் தமிழரின் தகவல் தொடர்பு சிறந்து காணப்படுகிறது.

## துணைநூற்பட்டியல்

1. பாலசுப்பிரமணியன்.கு.வெ.,(உ.ஆ), 2004, சங்க இலக்கியம் (எட்டுத்தொகை & பத்துப்பாட்டு), மதுரை, நேசனல் செஞ்சுரி புக் ஹவுஸ்.
2. புலியூர்க் கேசிகன்.,(உ.ஆ), 2012, தொல்காப்பியம், சென்னை, கௌரா பதிப்பகம்.